விவசாயிகளுக்கு வாடகைக்கு விட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு டிரோன்கள்

80 கோடி ஏழைகளுக்கு இலவச உணவு தானிய திட்டம்: மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு

மத்திய மந்திரிசபை முடிவு

புதுடெல்லி, நவ.30

பிரதம மந்திரி கரீப் கல்யாண் அன்னயோஜனா திட்டத்தின்கீழ், ரேஷன் கடைகளில் 80 கோடி ஏழைகளுக்கு மேலும் 5 ஆண்டுகளுக்கு இலவச உணவு தானியம் வழங்கும் பணியை நீட்டிக்க மத்திய மந்திரிசபை கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

கடந்த 2020ம் ஆண்டு, கொரோனா பெருந்தொற்று பரவிய போது, மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக, பிரதம மந்திரி கரீப் கல்யாண் அன்னயோஜனா திட்டம் உருவாக்கப்பட்டது.

அதன்கீழ், ரேஷன் கடைகளில், நாடு முழுவதும் உள்ள சுமார் 80 கோடி ஏழைகளுக்கு மாதந்தோறும் தலா 5 கிலோ உணவு தானியங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின்கீழ் ஏற்கனவே மானிய விலையில் வழங்கப்பட்ட 5 கிலோ உணவு தானியத்துடன் கூடுதலாக இந்த இலவச உணவு தானியங்கள் வழங்கப்பட்டன. இத்திட்டம், அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்தது. அடுத்த மாதம் (டிசம்பர்) 31ந் தேதியுடன் இத்திட்டம் முடிவடைய இருந்தது. இருப்பினும், மேலும் 5 ஆண்டுகளுக்கு இலவச உணவு தானியம் வழங்குவது நீட்டிக்கப்படும் என்று சமீபத்தில் சத்தீஷ்கார் மாநிலத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேசினார்.

இந்நிலையில், பிரதமர் மோடி தலைமையில் நடந்த மத்திய மந்திரிசபை கூட்டத்தில், இலவச உணவு தானியம் வழங்கும் திட்டத்தை நீட்டிக்க அதிகாரப்பூர்வமாக முடிவு எடுக்கப்பட்டது.

மந்திரிசபை எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் அனுராக் தாக்குர் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:

பிரதம மந்திரி கரீப் கல்யாண் அன்னயோஜனா திட்டத்தை ஜனவரி 1ந் தேதியில் இருந்து மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய மந்திரிசபை கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. இதனால் அடுத்த 5 ஆண்டுகளுக்கு சுமார் ரூ.11 லட்சத்து 80 ஆயிரம் கோடி செலவாகும்.

16வது நிதிக்குழு...

ஏற்கனவே அமைக்கப்பட்ட 15 வது நிதிக்குழுவின் பரிந்துரைகள், 2026ம் ஆண்டு மார்ச் 31ந் தேதியுடன் முடிவடைகின்றன. எனவே, 16வது நிதிக்குழு அமைக்க வேண்டியுள்ளது. 16வது நிதிக்குழுவின் பணி வரன்முறைகளுக்கு மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்தது. அதன் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் விரைவில் அறிவிக்கப்படுவர். அக்குழு, தனது அறிக்கையை 2025 ம் ஆண்டு அக்டோபர் மாதத்துக்குள் சமர்ப்பிக்கும். அதன் பரிந்துரைகள், 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து 5 ஆண்டுகளுக்கு செல்லுபடி ஆகும்.

வரிவருவாயை மத்திய–மாநில அரசுகளுக்கிடையே எவ்வளவு பகிர்ந்து கொள்வது என்பது பற்றி 16 வது நிதிக்குழு பரிந்துரை அளிக்கும்.

ஜார்கண்ட் மாநிலம் குந்தியில் நடந்த பழங்குடியினர் பெருமை தின நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, பழங்குடியினர் மேம்பாட்டுக்கான புதிய திட்டத்தை அறிவித்தார். அதன்படி, 'பிரதம மந்திரி ஜஞ்ஜதி ஆதிவாசி நியாய மகா அபியான்' என்ற அந்த திட்டத்துக்கு மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.24 ஆயிரத்து 104 கோடி ஆகும்.

இதில், மத்திய அரசின் பங்கு ரூ.15 ஆயிரத்து 336 கோடியாகவும், மாநில அரசுகளின் பங்கு ரூ.8 ஆயிரத்து 768 கோடியாகவும் இருக்கும்.

கடந்த 2018ம் ஆண்டு, குற்றவியல் சட்ட திருத்த சட்டம் கொண்டு வரப்பட்டது. அதன்கீழ், 31 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 1,023 விரைவு கோர்ட்டுகள் அமைக்க மத்திய அரசு முடிவு செய்தது. இவற்றில் 'போக்சோ' சட்ட வழக்குகளை விசாரிக்கும் 389 கோர்ட்டுகளும் அடங்கும்.

முதலில், ஓராண்டு காலத்துக்கு செயல்படும் வகையில், 2019 ம் ஆண்டு அக்டோபர் 2ந் தேதி இத்திட்டம் தொடங்கப்பட்டது. பின்னர், மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்ட இத்திட்டம், கடந்த மார்ச் 31ந் தேதியுடன் முடிவடைந்தது.

இந்நிலையில், பாலியல் குற்ற வழக்குகளில் விரைவான நீதி கிடைப்பதற்காக, மேலும் 3 ஆண்டுகளுக்கு விரைவு கோர்ட்டுகளை நீட்டிக்க மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கு ரூ.1,952 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மகளிருக்கு டிரோன்கள்

மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு டிரோன்கள் வழங்கும் ரூ.1,261 கோடி திட்டத்துக்கும் மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்துள்ளது.

விவசாய பணிகளுக்கு விவசாயிகளுக்கு டிரோன்களை வாடகைக்கு விடுவதற்காக, நாடு முழுவதும், தேர்ந்தெடுக்கப்பட்ட 15 ஆயிரம் மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு டிரோன்கள் வாங்க ரூ.8 லட்சம் வரையோ அல்லது டிரோன் விலையில் 80 சதவீத தொகையோ வழங்கப்படும். 2024–25, 2025–26 ஆகிய 2 நிதி ஆண்டுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

விஜயகாந்த் விரைவில் குணம் அடைந்து வீடு திரும்புவார்: பிரேமலதா தகவல்

சென்னை, நவ. 30–

விஜயகாந்தின் உடல்நிலை குறித்து அவரது மனைவியும், தே.மு.தி.க. பொருளாளருமான பிரேமலதா நேற்று இரவு ஒரு வீடியோ வெளியிட்டார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

விஜயகாந்த் உடல்நிலை குறித்து இன்று (நேற்று) காலை மருத்துவமனை நிர்வாகம் கொடுத்த அறிக்கை வழக்கமான அறிக்கை தான். தவிர அதில் பதற்றப்படவோ, பயப்படவோ ஒன்றும் இல்லை. விஜயகாந்த் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருக்கிறார். வெகுவிரைவில் பூரண நலன் பெற்று, வீடு திரும்பி, உங்கள் அத்தனை பேரையும் நிச்சயம் சந்திப்பார்.

எனவே நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்வது, யாரும் பயப்பட வேண்டாம். விஜயகாந்துடன் கூடவே இருந்து அவரை கண்ணும், கருத்துமாக பார்த்து கொண்டிருக்கிறேன். அவர் பூரண நலன் பெற்று விரைவில் வீடு திரும்புவார். யாரும் எந்தவிதமான வதந்திகளையும் நம்ப வேண்டாம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

கனமழை பாதித்த இடங்களுக்கு நேரில் சென்று நிவாரண உதவி வழங்குங்கள்:அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்களுக்கு முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவு

சென்னை, நவ.30–

கனமழை பாதித்த இடங்களுக்கு நேரில் சென்று நிவாரண உதவிகள் வழங்குமாறு அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் மற்றும் உள்ளாட்சி பணியாளர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதனால் மாநிலம் முழுவதும் நேற்று பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

இதைத்தொடர்ந்து தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட கலெக்டர் மற்றும் அனைத்துத்துறை அதிகாரிகளுக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டு உள்ளார். அதன்படி அதிகாரிகள் களத்தில் இறங்கி பணியாற்றி வருகின்றனர். மாநில, மாவட்ட அவசர கால கட்டுப்பாட்டு மையங்கள் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றன.

இந்த கட்டுப்பாட்டு மையங்களுக்கு வரும் தகவல்கள் அடிப்படையில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அதிகாரிகள் நேரில் சென்று தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அதிகாரிகளுடன் சேர்ந்து அமைச்சர்களும், எம்.எல்.ஏ.க்களும் மழை பாதித்த இடங்களுக்கு நேரில் சென்று நிவாரண பணிகளை மேற்கொள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், 'கனமழையால் பாதிக்கப்பட்ட இடங்களில் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மேற்கொள்ள வேண்டும். கனமழை பாதித்த இடங்களுக்கு நேரில் சென்று களப்பணியாற்ற வேண்டும்.

கனமழையால் பொதுமக்கள் எந்தவித சிரமத்துக்கும் உள்ளாத வகையில் உடனுக்குடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்' என கூறியுள்ளார்.

சென்னையில் பெய்த கனமழை காரணமாக போலீசாரும் மீட்பு பணிகளில் களமிறக்கப்பட்டனர். போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவின்பேரில் சட்டம் ஒழுங்கு போலீசார் 1,500 பேரும், போக்குவரத்து போலீசார் 1,000 பேரும் என மொத்தம் 2,500 பேர் நேற்று களமிறக்கப்பட்டனர். போக்குவரத்து சீரமைப்பு, மழைநீர் தேங்காதவாறு நடவடிக்கை போன்ற பணிகளிலும் போலீசாரும் நேற்று விடிய விடிய ஈடுபட்டதை பார்க்க முடிந்தது.

ஆவின் டிலைட் 200 மி.லி. பாக்கெட்: நாளை முதல் ரூ.10க்கு விற்பனை

சென்னை, நவ.30–

ரூ.10க்கு விலையில் ஆவின் டிலைட் 200 மி.லி. பாக்கெட் நாளை முதல் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்ப தாவது:

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நாளொன்றுக்கு சுமார் 14.50 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது. அதேபோல் நாளொன்றுக்கு சுமார் ரூ.1 கோடி மதிப்புள்ள பால் உபபொருட்களும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்களின் பால் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இருமுறை சமன்படுத்தப்பட்ட பால் (மெஜெந்தா நிறம்), சமன்படுத்தப்பட்ட பால் (நீல நிறம்), நிலைப்படுத்தப்பட்ட பால் (பச்சை நிறம்) மற்றும் நிறை கொழுப்பு பால் (ஆரஞ்சு நிறம்) விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்தநிலையில் பொதுமக்களின் ஆரோக்கியத்திற்கு ஏற்ற வகையிலும் மற்றும் அனைத்து வயதினரும் பருகும் வகையிலும் கடந்த மே 9ந்தேதி சென்னையில் வைட்டமின் ஏ மற்றும் டி செறிவூட்டப்பட்ட 500 மி.லி. ஆவின் டிலைட் பால் (ஊதா நிற பால் பாக்கெட்) அறிமுகம் செய்யப்பட்டு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இதனைத்தொடர்ந்து தற்போது ஆவின் 500 மி.லி. டிலைட் பால் ரூ.21 விலையில் மாதாந்திர பால் அட்டைகள் வருகிற டிசம்பர் மாதம் முதல் அனைத்து வட்டார அலுவலகங்கள், ஆவின் பாலகங்கள் மற்றும் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களில் விற்பனை செய்யப்படும்.

மேலும் பொது மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப ரூ.10க்கு 200 மி.லி. ஆவின் டிலைட் பால் வருகிற 1ந்தேதி முதல் அறிமுகப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படவுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சல்லானி கேபிடல் லிமிடெட்

(முன்னர் இந்தோ ஏஷியா பைனான்ஸ் லிமிடெட்)
எண். 15, நியூ கிரி சாலை, தி.நகர், சென்னை – 600 017.
CIN: L65191TN1990PLC019060

அறிவிப்பு

1. கம்பெனிகள் சட்டம் 2013ன் பொருந்தக்கூடிய பிரிவுகள் மற்றும் அதன் கீழுள்ள விதிகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015 (எல்ஓடிஆர் விதிகள்) மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் (''எம்சிஏ சுற்றறிக்கைகள்'') வெளியிடப்பட்ட ஏப்ரல் 08, 2020, தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 17/2020 மற்றும் மே 5, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.20/2020, ஜனவரி 13, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.02/2021 மற்றும் மே 05, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.02/2022 மற்றும் செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியாவின் மே 13, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/ HO/CFD/CMD2/CIR/P/2022/62 (செபி சுற்றறிக்கை)ன்படி, அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை செயல்படுத்த சல்லானி கேபிடல் லிமிடெட்டின் (முன்னர் இந்தோ ஏஷியா பைனான்ஸ் லிமிடெட்) (கம்பெனி) அசாதாரண பொதுக் கூட்டம் ("EGM") புதன்கிழமை, 20 டிசம்பர், 2023 அன்று காலை 11.00 மணிக்கு காணொளி காட்சி ('VC')/பிற ஒலி ஒளி சாதனங்கள் ('OAVM') மூலமாக நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
2. எம்சிஏ சுற்றறிக்கைகள் மற்றும் செபி சுற்றறிக்கையின்படி கம்பெனி/ டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த/ புதுப்பித்த உறுப்பினர்களுக்கு அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
3. அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.indoasiafinance.com, ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் BSE Limited at www.bseindia.comல் கிடைக்கும். மேலும் அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பு சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்டின் (சிடிஎஸ்எல்) (கம்பெனியின் மின்னணு வாக்குப்பதிவு முகவர்) இணையதளம் www.evotingindia.comலும் கிடைக்கும்.
4. கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108, கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 20 மற்றும் செபி (எல்ஓடிஆர்) விதிகள் 2015ன் விதி 44ன்படி, மேற்சொன்ன அறிவிப்பில் கண்டுள்ள அனைத்து தீர்மானங்கள் மீது வாக்களிக்க சிடிஎஸ்எல்–லினால் அளிக்கப்படும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதியை கம்பெனி அளிக்கிறது.
5. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு ஞாயிற்றுக்கிழமை, 17 டிசம்பர், 2023 அன்று (காலை 9.00 மணி) தொடங்கி செவ்வாய்கிழமை 19 டிசம்பர், 2023 அன்று (மாலை 5.00 மணி) முடிவடைகிறது. இந்த காலத்தில், கட் ஆப் தேதியன்று பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் அசாதாரண பொதுக்கூட்டத்திற்கு முன்பாக தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கலாம். அதன்பின்னர் மின்னணு வாக்குப்பதிவினை சிடிஎஸ்எல் நிறுத்திவிடும். கூடுதலாக, அசாதாரண பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு வசதி கிடைக்கும் மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்காமல் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் அசாதாரண பொதுக்கூட்டத்தில் வாக்களிக்க உரிமை உள்ளவர்கள் ஆவார்கள். தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.
6. கட் ஆப் தேதியான புதன்கிழமை, 13 டிசம்பர், 2023 அன்று கம்பெனியின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் வைத்துள்ள சமபங்குகளின் விகிதத்தில் உறுப்பினர்களின் வாக்குரிமை இருக்கும். கட் ஆப் தேதியன்று கம்பெனியின் உறுப்பினரான நபர் அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அனைத்து தீர்மானங்கள் மீது அசாதாரண பொதுக்கூட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது மின்னணு வாக்குப்பதிவு வசதி மூலமாக வாக்களிக்க தகுதி உடையவர் ஆவார்.
7. கம்பெனியினால் அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பிய பின்னர் பங்குகளை பெற்று கம்பெனியின் உறுப்பினரான நபர்கள் மற்றும் கட் ஆப் தேதியன்று டெபாசிட்டரிகளால் (CDSL & NSDL) பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்கள் பட்டியலில் கண்டுள்ள பெயர்களில் உள்ள நபர்கள் மேற்சொன்ன அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி அவர்களது வாக்களிக்கும் உரிமையை பயன்படுத்தலாம்.
8. அசாதாரண பொதுக்கூட்டத்தில் பங்கேற்பது அல்லது மின்னணு வாக்குப்பதிவு தொடர்பாக ஏதாவது கேள்வி அல்லது பிரச்சினைகள் இருப்பின் அது குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவை அணுகலாம் மற்றும் உதவிப்பிரிவின் கீழுள்ள www.evotingindia.comல் உள்ள மின்னணு வாக்குப்பதிவு உபயோக கையேட்டை பார்வையிடலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.comக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.
9. மின்னணு வாக்குப்பதிவு வசதி தொடர்பாக ஏதேனும் குறைகள் இருப்பின் அது குறித்து கம்பெனி செயலாளரை info@indoasiafinance.comல் அணுகலாம் அல்லது பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் (பி) லிமிடெட், சுப்ரமணியம் பில்டிங், எண். 1 கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை 600 002 Ph: 28460390 (5 lines), Email ID: investor@cameoindia.com, website: www.cameoindia.com இணையதள FAQ பிரிவை அணுகலாம்.

சல்லானி கேபிடல் லிமிடெட்டிற்காக
இடம்: சென்னை ஒப்பம்/– பதும் ஜெ சல்லானி
தேதி: 10.11.2023 நிர்வாக இயக்குநர்

கன்னாட்டு பின்கோல்ட் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

எண்: 7, தரை தளம், கருணீகர் தெரு, ஆதம்பாக்கம், சென்னை 600088
(செயின்ட் தாமஸ் மவுண்ட் ரயில் நிலையம் அருகில்)
மின்னஞ்சல் முகவரி: info@kannattu.com,
இணையதளம்: www.kannattu.comCIN : U65191TN1993PTC025382
GSTIN: 33AACA4309D1ZF

தங்கநகை ஏல அறிவிப்பு

நிறுவனத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளில் அடகு வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான நிலுவைத் தொகையை செலுத்தி மீட்காமல் காலதாமதாக உள்ளவை மற்றும் பலமுறை அறிவிப்புகள் அளித்தும் இதுவரை மீட்டெடுக்கப்படாதவை சம்பந்தப்பட்ட கிளைகளில் ஏலம் விடப்படும் என்று சம்பந்தப்பட்ட அனைவரின் தகவலுக்காக இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சென்னை : GL1021/60,1022/18,21,28.

அறிவிக்கப்பட்ட தேதியில் எங்களால் கிளையில் ஏலத்தை நடத்த முடியாவிட்டால், எந்த அறிவிப்பும் இல்லாமல் அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் மறுஏலம் விடப்படும்.

8 டிசம்பர் 2023 அன்று மின்னணு-ஏல தளமான https://egold.auctiontiger.net மூலம் கீழே கையொப்பமிடப் பட்டவர்களால் ஏலம் நடைபெறும்.

குறிப்பு: ஏல தேதிக்கு முன்பாக வாடிக்கையாளர்கள் தங்களின் தங்க நகைகளை மீட்டுக்கொள்ளலாம்.

குறிப்பு: ஏலதாரர்கள் அடையாள அட்டை/பான் கார்டு/ஜிஎஸ்டி சான்றிதழை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (பதிவு செய்யப்பட்ட டீலர்களாக இருந்தால்) வெற்றி பெற்ற ஏலதாரர்கள் முழு ஏலத் தொகையையும் RTGS மூலம் மாற்ற வேண்டும்.

கன்னாட்டு பின்கோல்ட் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக
இடம்: சென்னை இயக்குனர்
நாள் : 27/11/23 DIN : 06740057

equitas Equitas Small Finance Bank

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

CIN: L65191TN1993PLC025280
பதிவு அலுவலகம்: 4வது மாடி, ஸ்பென்ஸர் பளாசா, ஃபேஸ் 2, 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை-2
தொ.பே: 044-42995000 | தொலைநகல்: 044-42995050
மின் அஞ்சல்: cs@equitasbank.com | www.equitasbank.com

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் காகித வடிவிலான பங்குகளை (ஈக்விட்டி ஷேர்ஸ்) வைத்திருப்பவர்களின் கவனத்திற்கு

இந்திய பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI) செப்டம்பர் 26, 2023 தேதியிட்ட சுற்றறிக்கை எண் SEBI/HO/MIRSD/POD-1/P/CIR/2023/158ன் மூலம், வருமான வரி எண், Nominee நியமனம், தொடர்பு & வங்கிக் கணக்கு விவரங்கள், காகித வடிவில் பங்குகளை வைத்திருப்பவர்களின் மாதிரி கையொப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடுவை டிசம்பர் 31, 2023 வரை நீட்டித்துள்ளது. பத்திரங்களை காகித வடிவத்தில் வைத்திருக்கும் பங்குதாரர்கள் மேற்சொன்ன விவரங்களை (புதுப்பிக்காமல் இருந்தால்) உடனடியாக புதுப்பிக்குமாறு கேட்டுகொள்கிறோம்.

மேற்சொன்ன விவரங்களை புதுப்பிக்க தேவையான ஆவணங்களை வங்கியின் கீழ்காணும் இணையதளத்தில் பெற்றுக் கொள்ளலாம் **https://ir.equitasbank.com/wp-content/uploads/2023/11/For-the-Attention-of-Holders-of-Physical-Securities-of-the-Bank.pdf**.

இது தொடர்புடைய ஆவணங்களை வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் ("RTA") க்கு

1) சுய சான்றளிக்கப்பட்ட மற்றும் தேதியிட்ட காகித பிரதிகள் மூலம் M/s. KFin Technologies Limited (Unit: Equitas Small Finance Bank Limited), Selenium Tower-"B", Plot No 31 & 32, Gachibowli, Financial District, Nanakramguda, Serilingampally, Hyderabad – 500032, என்ற முகவரிக்கோ அல்லது

2) RTA வில் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் ஐடி மூலம் மின்னணு முறையில் (அனைத்து ஆவணங்களும் பங்குதாரரால் மின்னணு/ டிஜிட்டலில் கையொப்பமிட்டு) **einward.ris@kfintech.com** என்கிற மின்னஞ்சலுக்கோ அனுப்பலாம்.

இடம்: சென்னை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்,
தேதி: 29/11/2023 **N. ராமநாதன்,** நிறுவன செயலாளர்

படிவம் எண். INC 26
(நிறுவனங்கள் (இணைத்தல்) விதிகள் 2014, விதி 30ன்படி)
நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுவதற்காக வெளியிடப்படும் விளம்பரம்
மத்திய அரசு முன்பாக,
தென் பிராந்தியம்
நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 13 துணை பிரிவு 4 மற்றும் நிறுவனங்கள் (இணைத்தல்) விதிகள் 2014, விதி 30 துணை விதி(5) பிரிவு (a)ன் விஷயத்தில்
மற்றும்
இன்ஸ்பைரேஜ் சாஃப்ட்வேர் கன்சல்டிங் பிரைவேட் லிமிடெட் விஷயத்தில் (CIN-U72900TN2009PTC071943)
பதிவு அலுவலகம்: எண்.5, நேரு நகர் இரண்டாவது தெரு அடையார், சென்னை 600020, தமிழ்நாடு, இந்தியா, மனுதாரர்
நவம்பர் 13, 2023 அன்று நடைபெற்ற அசாதாரண பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானத்தின்படி, நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை ''தமிழ்நாடு மாநிலத்திலிருந்து மகாராஷ்டிரா மாநிலத்திற்கு'' மாற்றுவதற்காக நிறுவனத்தின் நிறுவனங்களின் குறிப்பாணையில் திருத்தம் செய்வதை உறுதி செய்ய நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 13ன் கீழ் மத்திய அரசுக்கு விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்ய நிறுவனம் திட்டமிட்டுள்ளது என்று பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை மாற்றும் திட்டத்தினால் எவரது நலமேனும் பாதிக்கப்படுவதாக கருதுவாராயின், பாதிக்கப்படும் நலன் மற்றும் எதிர்ப்பதற்கான காரணத்துடன் கூடிய புகார் படிவத்தை அபிடவிட்டுடன் இணைத்து இந்த அறிவிப்பு விளம்பரம் வெளியான பதினான்கு நாட்களுக்குள் எம்சிஏ–21 (www.mca.gov.in) போர்ட்டலில் சமர்ப்பிக்கலாம் அல்லது பிராந்திய இயக்குநர், தென் பிராந்தியம், 5வது தளம், சாஸ்திரி பவன், 26 ஹாடோஸ் சாலை, சென்னை – 600 006 என்ற முகவரிக்கு அளிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். அதன் நகல் ஒன்றை கீழ்க்கண்ட முகவரியில் உள்ள விண்ணப்பதாரர் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.
பதிவு அலுவலகம்: எண்.5, நேரு நகர் இரண்டாவது தெரு அடையார், சென்னை 600020, தமிழ்நாடு, இந்தியா,
விண்ணப்பதாரர் சார்பாக
ஒப்பம்/-
அருப் சட்டர்ஜி
இயக்குனர்
DIN: 02732165
8வது தளம், பில்டிங் எண்.1, டவர் பி, இன்போ ஸ்பேஸ், SEZ
இடம் : குர்கான் இன்போஸ்பேஸ் லிமிடெட், செக்டார் எண்.21, துண்டஹேரா, குர்கான் 122001
இடம்: சென்னை
நாள்: 29/11/2023

IN THE COURT OF SUBORDINATE JUDGE AT TAMBARAM
I.A.No.2/2023
In
O.S.No.551/2009

Mrs.Kamalammal and others
Petitioner/Plaintiff
-VS-
Kanniappan and others
Respondents/Defendants

To;
1.Kanniappan,
No.1/353, Pallikoodam salai,
Vengaivasal Village,
Chennai-600073.
2.Ezhumalai ,
S/o.Palani,
opposite to Bus stand,
No.1/76, Anjaneyar koil street,
Vengaivasal Village,
Chennai-600073.
3.Nandhakumar,
No.36, Maslamani road ,
1st Floor, Balaji Nagar,
Rayapettah Chennai-600073.
4.Munusamy,
5.Geetha,
D/o.Gurusamy ,
6.Nandhan,
S/o.Ranganathan,
R4 to R6 are residing at
No.976, Lenin Street,
Santhosapuram,
Chennai-600073.
7.Bhaskar,
S/o.Sangadeva Mudaliar
Karpaga Vinayagar Koil Street,
Alandur, Chennai-600016.
8.Kaasi Naicker,
No.17, 11th Street,
Nehru Colony,Nanganallur,
Chennai-600061.
Respondents/Defendants

Take Notice that the Petitioner/ Plaintiff herein filed an application under section-5 of Limitation Act to condone the delay of 3181 days for filing petition to setaside the abatement of the suit and the same has been numbered as I.A.No.2/2023.
Hence the Respondents above named are hereby informed to appear on 2.12.2023 at 10.30 a.m either in person or through counsel before the above Sub Court at Tambaram failing which the above matter will be and disposed as

T.BALAJI
Counsel for Petitioners/Plaintiffs

kotak Kotak Mahindra Bank

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா.
பின்கோடு – 400 051 கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006. லேண்ட் மார்க்: சிட்ரான் கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அருகில்

சுவாதீன அறிவிப்பு

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல்